# ஐக்யம் - FELLOWSHIP

நாம் அனைவரும் கிறிஸ்துவின் சமாதானத்தில் ஒருங்கிணைந்து ஜீவிப்பது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. அந்த சமாதானத்தை நாம் நம்முடைய இருதயத்திலும், மனதிலும் பெற்றிருக்கிறோம். அது மிகச் சிறந்த முறையில் எல்லா மனிதர்களையும் புரிந்து கொள்ளுகிறது.

நாம் கிறிஸ்துவின் பாடுகளையும், சிலுவைப் பாடுகளையும், மரணத்தையும் அறிவோம். அவருடைய உயிர்த்தெழுதலும் நமக்குத் தெரியும். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின்மூலம் நாம் பிதாவாகிய கடவுளுடன் சமாதானம் பெற்றுள்ளோம். இதை நாம் விசுவாசிக்கிறோம். போதிக்கின்றோம். கல்வாரிச் சிலுவையில், கிறிஸ்து நமக்காக வெற்றிச் சிறந்து பெற்றுத் தந்த அந்த சமாதானத்தினால் நாம் அனைவரும் ஒன்றாய் ஐக்யப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்து விசுவாசத்தில் மாத்திரம் நாம் கடவுளுடன் ஒன்றாய் ஐக்யப்பட்டிருக்கவில்லை. ஆனால் நாம் நம்முடைய பொதுவிசுவாசத்தினால் கிறிஸ்துவின் திருச்சபையிலும் ஒருவரோடு ஒருவர் ஒன்றாயிருக்கிறோம். ஐக்யப்பட்டிருக்கிறோம். நாம் சரியான தேவ சமாதானத்தை உடையவராயிருக்கிறோம். ஆகவே கிறிஸ்துவ திருச்சபையிலும், நாம் ஒருவரோடு ஒருவர் ஒரு சமாதான உறவு உடையவர்களாய் இருக்கிறோம் என்று பவுல் சொல்லுகிறார். எபேசி. 4:3.

நம்முடைய திருச்சபைகளில் நாம் நம்முடைய கடவுளுடைய வார்த்தைகளை உண்மையோடும், உத்தமத்தோடும், கருத்தோடும் கலப்பின்றி உபதேசிப்பதற்கு அங்கீகரிப்பதின்மூலம் இந்த ஐக்யத்தைநாம் ஆவியிலும் நாம் உடையவராயிருக்கிறோம் என்று இது காட்டுகிறது. நாம் காணப்படுகிற ஒரு கிறிஸ்துவின் சரீரத்தை உருவாக்கியிருக்கிறோம்.

சர்ச் ஆப் லூத்தரன் கன்பெஸ் கிறிஸ்துவுக்காகவும், அவருடைய இராஜ்ஜியத்திற்காகவும் ஒருங்கிணைந்து, ஐக்யப்பட்டு ஊழியம் செய்ய நம்மை ஏவுகிறது (அ) கட்டளையிடுகிறது.

நம்முடைய ஐக்யம் கடவுளுடைய பரிசுத்த வார்த்தையைக் கொண்டு அடித்தளமிடப்பட்டிருக்கிறது.

நாம் நம்முடைய திருச்சபைகளில் எந்தவொரு தப்பான உபதேசங்களையும், தவறான, கள்ள போதகரையும் (பாஸ்டர்களையும்) சகித்துக் கொள்ள மாட்டோம். ஒரே ஆவியில் உறுதியுடையவராயிருக்க, சுவிஷேசத்தில் விசுவாசமுள்ளவராயிருக்க முயற்சியுடையவராய் ஜீவிக்க, இருக்க அதனுடைய எல்லா பக்கத்தையும் நாடி தேடிச் செல்கிறோம். பிலிப் 1:27. ஐக்கியம் ஒப்பந்தத்தை ஆதாரப்பட்டிருக்கக்கூடாது. தேவனுடைய வார்த்தையின்மேல் அது போதிக்கிற உண்மையான வேதத்திற்கு விரோதமாயிருக்கக்கூடாது. அப்படிப்பட்டவர்களுடன் ஐக்கியப்படக்கூடாது.

மேலும் மேலும் மறுபடியும் மறுபடியும் வார்த்தை நமக்குச் சொல்கிறது. ஒரு கூட்ட கிறிஸ்தவர்கள் ஐக்யப்பட்டு கிறிஸ்துவுக்காய் ஊழியம் செய்கிறார்கள். கிறிஸ்துவை தொழுதுகொள்கிறார்கள். மேலும் எந்த ஒரு மதப்பழக்கத்தையும், வழக்கத்தையும் ஒருங்கிணைந்து ஐக்யப்பட்டு செய்கிறார்கள்.

அவர்கள் கண்டிப்பாக கடவுளுடைய வார்த்தை என்ன போதிக்கிறதோ அதிலே ஒப்பந்தம் உடையவராயிருப்பார்கள். 1 கொரி. 1:10.

நம்முடைய திருச்சபை நம்முடைய கிறிஸ்துவ ஐக்யத்திலும், எல்லா கடவுளுடைய வார்த்தை போதிக்கிற போதனைகளை ஏற்றுக் கொள்வதிலும் அஸ்திபாரமிடப்பட்டிருக்கிறது. கடவுளுடைய வார்த்தைக்கு அதிகமாக, அல்லது குறைவாகவோ எதுவும் இல்லை.

நம்முடைய உபதேசங்களும், போதனைகளும் நாம் எல்லா கடவுளுடைய வார்த்தைகள் சொல்லுகிறதையும் ஏற்றுக் கொண்டு நாங்கள் மத பழக்க வழக்க ஐக்யங்களின் பல்வேறு நிலைகளில் அதை பழக்கப்படுத்தி வழக்கப்படுத்துகின்றோம். தொழுது கொள்ளுதல், ஜெபங்கள், கடவுளுடைய வார்த்தையை உபதேசிப்பது, கற்றுக் கொடுப்பது, காணிக்கைகள் கொடுப்பது, சபை ஊழியங்கள் போன்ற பல்வேறு நிலைகளில் மத ஐக்யத்தை வழக்கப்படுத்துகிறோம்.

எங்களுடைய திருச்சபைகளில் தவறான, வேதத்திற்கு புறம்பான உபதேசங்களை போதிப்பதை எங்களால் சகித்துக் கொள்ள முடியாது. கடவுள் நாம் தவறான உபதேசங்களைப் போதிக்கக்கூடாது. புகுத்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்.

ஒரே ஒரு தவறான உபதேசம் கூட அனுமதிக்கப்படக்கூடாது. ஏனென்றால், பவுல் கலாத் 5:9 சொல்கிறார். நாம் கடவுளுடைய வார்த்தையில் தொடர்ந்து அல்லது இடைவிடாது நீடித்து இருக்க வேண்டுமென்றும் தவறான உபதேசங்களுக்கு, அதை போதிக்கிற போதகர்களுக்கு (கள்ள உபதேசிகளுக்கு) ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்று நம்முடைய ஆண்டவர் நமக்கு கற்பித்து, போதித்து இருக்கிறார்.

எங்கள் திருச்சபைகளில் நாங்கள் விளையாட்டாக கூட கள்ள உபதேசியர்களையும், தவறாக போதிப்பவர்களையும் தப்பான உபதேசங்களையும் அனுமதிக்கமாட்டோம். ஆகவே நாங்கள் தப்பாக போதிப்பவர்களையும், தப்பான உபதேசங்களையும் எங்கள் திருச்சபகைளிலோ அல்லது எங்கள் நிறுவனங்களிலோ எங்களால் கண்டிப்பாக சகித்துக் கொள்ளவே முடியாது.

பைபிள் தெளிவாக Rom 16:17–18ல் சொல்கிறது II பேது 2:1.

நாங்கள் யாரை அங்கீகரித்து ஏற்றுக் கொள்கிறோமோ அவர்களுக்காக மாத்திரம் நாங்கள் ஜெபம் செய்வோம். கொஞ்சம் அளவே தப்பு இருக்கிற சபைகளில் கூட எங்கள் ஊழியர்களை, எங்கள் ஊழியங்களை எங்களால் பகிர்ந்து கொள்ள முடியாது.

ஆரோக்கியமான கடவுளுடைய வார்த்தைகளை உபதேசிப்பதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும், நாங்கள் காணிக்கை கொடுக்கின்றோம். தப்பாக போதிப்பவர்களையும், கற்றுக் கொடுப்பவர்களையும், நாங்கள் மன்னிப்பது இல்லை.

நாங்கள் ஐக்கியப்பட்டு, ஒருங்கிணைந்து கற்கிறோம். ஏனென்றால், நாங்கள் முழுவதுமாய் ஏற்றுக் கொள்கிறோம். அங்கீகரித்து இருக்கிறோம்.

கடவுளுடைய மெய்யான திருச்சரீரத்தையும், அவருடைய மெய்யான திரு இரத்தத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் ஐக்யப்பட்டு, ஒருங்கிணைந்து முழங்கால் படியிருக்கிறோம். ஏனன்றால், நாங்கள் எங்கள் விசுவாச அறிக்கையில் ஐக்யப்பட்டிருக்கிறோம்.

எங்கள் திருச்சபையைத் தவிர வேறு எங்கும் நாங்கள் திருவிருந்து எடுக்க மாட்டோம். ஏனென்றால், அவர்களோடு எங்களுக்கு எந்திவதமான ஐக்யமோ ஒப்பந்தமோ இல்லை.

நாங்கள் தொழுது கொள்வதற்கும், கற்றுக் கொள்வதற்கும் எங்கள் திருச்சபைகளைச் சேர்ந்த போதகரிடத்திலும், ஆசிரியரிடத்திலும் ஒன்று கூடுவோம். ஏனென்றால், அவர்கள் கடவுளுடைய வார்த்தையை மாத்திரமே எங்களுக்கு போதிப்பார்கள்.

எவ்வளவு சிறிய தப்பான போதனையாயிருந்தாலும், ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், கொஞ்சம் புளித்த மாவானது எல்லா மாவையும் புளிப்பானதாக மாற்றுவதுபோல் ஒருச் சிறிய தப்பான உபதேசம் நல்ல உபதேசத்துடன் கலக்கும்போது அதுவும் மாசுபடுகிறது. நாங்கள் கற்றுக் கொண்ட, படித்த, போதிக்கின்ற, கடவுளுடைய (முழுமையான) பூரணத்துவமுள்ள வார்த்தையை பொக்கிஷமாக பற்றிக் கொண்டிருப்போம். நாங்கள் ஏன், எதற்காக தப்பான உபதேசங்களை, போதனைகளை கண்டிப்பாக மன்னிப்பது இல்லை. அவைகளை அவர்களை சகித்துக் கொள்வதில்லை. அப்படி அவர்களை அனுமதித்தால் அது எவ்வளவு பயங்கரமானது, அபாயமானது என்பதை சற்று ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

நீங்கள் ஒரு வேளை கலங்கலான அல்லது சேறான தண்ணீரையும், நல்ல தெளிவான தண்ணீரையும் ஒன்றுங் கலந்தால் நீங்கள் என்ன பெறுவீர்கள்? கலங்கலான தண்ணீர்? நீங்கள் குடிப்பதற்கு எதை தயார் செய்வீர்கள்? நிச்சயமாக சுத்தமான தண்ணீரைத்தான் தயார் செய்வீர்கள். அப்படியே கடவுளுடைய வார்த்தையும்கூட அந்த தெளிந்த சுத்த நீரைப்போல் இருக்கிறது. அது முழுவதும் குடிப்பதற்கு இனிமையான தண்ணீர், ஆனால் தப்பான போதனை கலங்கிய கலங்கலான, சேறான தண்ணீரைப் போலிருக்கிறது. நீங்கள் ஒரு வேளை தெளிந்த சுத்தமான தண்ணீரில் கொஞ்சம் சிறிது கலங்கின தண்ணீரை கலந்தாலும் உன்னால் சீக்கிரத்தில் கூட தெளிந்த சுத்த தண்ணீர் பெற்று கொள்ள முடியாது. தப்பான உபதேசங்களும் இதைப் போலவே இருக்கிறது.

கடவுளுடைய வார்த்தையைக் கொண்டு எது தப்பு எதுச் சரி என்று சொல்வது நம்முடைய தலையாய நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. நாம் நியாயந்தீர்க்கக்கூடாது. மனிதனுடைய எல்லாப் பகுதியான ஜீவியத்திலும் எதுச் சரி, எது தப்பு என்று கடவுளுடைய வார்த்தையே நியாயந்தீர்க்க வல்லமையுள்ளதாயிருக்கிறது.

கடவுளுடைய வார்த்தையிலிருந்து பொறுக்கி எடுத்து, தேர்ந்தெடுத்தும், குறைச்சலாய் பேசுவது துணிகரமானதாயிருக்கிறது. அவருடைய வார்த்தை முழுமையாய் ஆராய்ந்து பார்ப்பதற்கும், மேல் ஊற்றுவதற்கும், பிரகடனப்படுத்துவதற்கும் போதிப்பதற்கும், விசுவாசிப்பதற்கும் கடவுள் கொடுத்திருக்கிறார்.

கடவுளுடைய வார்த்தையிலிருந்து நாம் எதையாகிலும் எடுத்தால் அது புற்றுநோயைப்போல் பெலவீனப்படுத்துகிறது. பவுல் கள்ள உபதேசத்தை (தப்பான போனையை) புற்றுநோய்க்குச் சமமாக ஒப்பிடுகிறார். புற்றுநோய் கிருமிகள் ஒரு மனுசனை தாக்கும்போது, தொற்றும்போது அவனுக்கு மரணம் நேரிடுகிறது. கள்ள உபதேசமும், தவறான போதனையும் அதைப்போலவே உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது. அது உண்மையை நிஜத்தை அழிக்கிறது. அதைப்போலவே புற்று நோயும் ஆரோக்கியமுள்ள சரீரத்தை அழிக்கிறது. புற்றுநோயானது முதலில் அதனுடைய அழிவைக் காட்டாது. அதேப்போலவே அதே வழியில் கள்ள உபதேசமும், தப்பான போதனையும், அதன் அழிவை முதலில் காட்டாது. முதலில் அது அபாயமானது என்று காண்பிக்காது. தப்பான உபதேசம் உண்மையை .. தின்று, வெளியே எடுத்து விடுகிறது. அவ்வாறான காரியம் மிகவும், மிகவும் ஆத்துமாவுக்கும் அபாயமான சேதத்தை கொண்டு வருகிறது.

நாம் இந்த கடைசி காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், சாத்தான் தன்னுடைய மோசம் போக்கும் கெடுதியான செயல்களால் நம்முடைய விசுவாசத்தை திருடுவான். சாத்தான் (அவன்) நம்முடைய ஆதாரமான அடித்தளமான விசுவாத்தை அழிக்க முயற்சி செய்கிறான். அவன் நம்முடைய விரோதி யார் தப்பான விதையைத் தூவுகின்றான். அது பரவுகிறது. அது பரவிவேர்விட்டு அதனுடைய விஷத்தை பரப்புகிறது. அது பரவி வேர்விட்டு அதனுடைய விஷத்தை பரப்புகிறது. அதற்கு ஒரே ஒரு விஷ முறிவு மருந்து அதை வெட்டி எடுத்து உண்மையான உபதேசத்தை பரவச் செய்வதே நம்முடைய திருச்சபைகளில் மாத்திரம் நாம் தொழுது கொள்வோம். நம்முடைய விசுவாசமெனும் கோட்டை கட்டி எழுப்பப்பட எங்கே உண்மை போதிக்கப்படுகிறது என்பதை நாமறிவோம்.

ஐக்யம் என்பது ஒப்பந்தத்தின் பேரில் ஆதாரப்பட்டிராமல் கடவுளுடைய வார்த்தை என்ன உபதேசிக்கிறதோ கலப்பில்லாத அந்த வார்த்தையை அடித்தளமிடப்பட்டு, ஆதாரப்பட்டதாயிருக்கிறது.

உபதேசிப்பதற்கும், கற்றுக் கொடுப்பதற்கும் உதவி செய்வோம் – கடவுளுடைய வார்த்தை பாவத்திலிருந்தும், தப்பிலிருந்தும், சாத்தானிடமிருந்தும் விடுவிக்கும்என்று அதிக ஜனங்களுக்குத் தெரியும். நம்முடைய திருச்சபைகளை கள்ள உபதேசத்திற்கு, தவறான போதனைகளுக்கு விடுவித்து காப்பாற்றுவதற்கு பாடுபடுவோம்.

அது நிஜமாகவே கிறஸ்தவத்திற்கு அதிக துன்பத்தை, சிரமத்தை உண்டாக்குகிறது. அன்பான கடவுளே இக்காலங்களில் உம்முடைய வார்த்தையை எங்களுக்குள் பாதுகாத்தருளும்.

சமாதானத்தின் தேவனும், ஆறுதலின் தேவனும் ஆண்டவருமாகிய ஏசு கிறிஸ்துவை ஒத்த ஏக சிந்தையை நம் ஒருவருக்கு ஒருவர் கொடுக்கட்டும். நாமனைவரும் ஏக சிந்தையுடையவராய் ஒரே வாயினால் நம்முடைய பிதாவாகிய கடவுளையும், ஆண்டவராகிய கிறிஸ்துவையும் மகிமைப்படுத்துவோமாக திரிதேயக தேவனுக்கு மகிமை உண்டாவதாக

ரோமர் 15:5–6. வசனம் பார்க்கவும்.